[1972 ஆகஸ்ட் 21

Paintings in Chittannavasal

* 209 *Q.*—THIRU *K.* T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state--

(*a*) whether it is a fact that paintings in Chittannavasal are fading and are in decay; and

(*b*) if so, the steps taken to preseve the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சித்தன்னவாசல் சித்திரங்கள் புராதனமான பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை. இப்போது அந்தச் சித்திரங்கள் அழிந்து வரக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதற்கு போதுமான பாதுகாப்பு இல்லை. அதோடு யாரோ அங்கே புதிதாக சில சித்திரங்களை எழுதியிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அது உண்மையா? அப்படியானால் அந்தச் சித்திரங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சித்தன்னவாசலில் இருக்கின்ற ஓவியங்கள் எல்லாம் கிட்டத்தட்ட 1,100 ஆண்டுகளுக்கு முன்னால் தீட்டப்பட்டவை. ஆகவே, பல்லாண்டுக் காலமாக மழையிலும் வெயிலிலும் அடிபட்டு, அதன் காரணமாக அந்த சித்திரங்கள் பாதிக்கப்பட்டு வந்தன. பின் புதுக்கோட்டை அரசு அந்த சித்திரங்களுக்கு ஓரளவு பாதுகாப்புக் கொடுத்து. மீண்டும் இப்போது அதற்குப் பாதுகாப்பு அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பண்டைக்கால சோழ மன்னர்களுடைய ஓவியங்கள் தஞ்சை கோவிலிலும், இம்மாதிரி பல்லவர் காலத்திய ஓவியங்கள் சித்தன்னவாசலிலும் இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த அந்த இடங்களில் காவலுக்கு என்று ஏதோ ஒருவரை போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒருவரால் அவைகளைச் சரியாக பார்த்துக்கொள்ள முடியாது. எனவே மேற்கொண்டு சில காவலர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவைகளுக்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்கிறது. இப்போது இருக்கின்ற காவல் போதாதென்றால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அறிக்கை வந்தபின் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.